Play ground for St. Bede's High School.

*1329 Q.—THIRU S.J. SADIQ PASHA: Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the St. Bede's High School, Santhome, Madras authorities have applied for the Government's permission to use the land behind their school for playground purposes ; and

(b) if so. the steps taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :— (அ) ஆம்.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்குப் படிப்புதவி.

* 330 வினா— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசு ஊழியர்களின் பிள்ளைகள் உதவித் தொகை] பெற பெற்றோர்கள் வருமான உச்சவரம்பை அதிகரிக்க அரசிற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்காக என்று தனியாகப் பெற்றோர்களின் வருமான வரம்பை அதிகரிக்கும் உத்தேசம் இல்லை.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, அரசாங்க ஊழியர்களுடைய ஊதியம் விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தாற்போல் ஏற்றப்படுகிறது. அந்தப் பஞ்சப்படி சம்பளத்தோடு சேர்க்கப் படுகிறது. எனவே, ஊதிய வரம்பு இல்லாமல், உள்ளாட்சித் துறையிலே, பணியாற்றுகிற ஊழியர்கள், அரசு கெஜட் பதிவு பெறாத ஊழியர்கள் குழந்தைகளுக்குச் சலுகை தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்களுக்கென்று தனியாக எந்தவித பரிசீலனையும் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. செல்லப்பன் : பேரவைத் தலைவரவர்களே, ஆசிரியர் பிள்ளைகளுக்குப் பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி அளிக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது அப்படி ஒரு உத்தேசம் இல்லை.